

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.10.2025) பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலக கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் அமைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய எல்.ஈ.டி. மின்னணு திரைகள் மூலமாக நகரின் பல்வேறு சுரங்கப்பாதைகளில் போக்குவரத்து சீராக நடைபெறுவதையும், மழையளவு விவரங்களையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி உள்பட மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (15.10.2025) தலைமைச் செயலகத்தில், சென்னை மற்றும் மதுரையில் 28.11.2025 முதல் 10.12.2025 வரை நடைபெறவிருக்கும் ஹாக்கி ஜூனியர் ஆடவர் உலகக் கோப்பை தமிழ்நாடு 2025 போட்டிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து ஹாக்கி இந்தியா நிர்வாகிகளுடன் கலந்தாய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, இந்திய ஹாக்கி சங்கச் செயலாளர் போலநாத்சிங், இந்திய ஹாக்கி சங்க பொருளாளர் மற்றும் தமிழ்நாடு ஹாக்கி சங்கத் தலைவர் சேகர் ஜே. மனோகரன் உள்பட ஹாக்கி இந்தியா நிர்வாகிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### நியாய விலைக் கடைகளில் நவம்பர் மாதம் பெறக் கூடிய

# அரிசியை அக்டோபர் மாதத்திலேயே பெறலாம்!

## அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்!



சென்னை, அக். 17-

வடகிழக்குப் பருவ மழை காலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள நியாயவிலைக் கடைகளில் அரிசி குடும்ப அட்டைதாரர்கள் நவம்பர் 2025 மாதத்திற்குரிய அரிசியை அக்டோபர் 2025 மாதத்திலேயே பெற்றுக் கொள்ளலாம் என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டின் அனைவருக்குமான பொது விநியோகத்திட்டத்தில் முன்னுரிமை மற்றும் முன்னுரிமையற்ற குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி மற்றும் கோதுமையுடன் சர்க்கரை, மண்ணெண்ணெய் மற்றும் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவை அனைத்து நியாயவிலைக் கடைகளின் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது, வடகிழக்குப் பருவமழை காலத்தில் மழை அதிகம் பெய்யலாம் என்பதைக் கருத்தில் கொண்டு அரிசி குடும்ப அட்டைதாரர்கள் பயனடையும் வகையில் அனைத்து நியாய விலைக்கடைகளிலும் அரிசி குடும்ப அட்டைதார்கள் தங்களுடைய நவம்பர் 2025 மாதத்திற்குரிய அரிசியை மட்டும் அக்டோபர் 2025 மாதத்திலேயே பெற்றுக்கொள்ளலாம்.

அதாவது அக்டோபர் மாத ஒதுக்கீடான 12 - 35 கிலோ அரிசியை ஏற்கனவே பெற்றவர்களும் அக்டோபர் மாத அரிசி ஒதுக்கீட்டை இதுவரை பெறாதவர்களும் நவம்பர் மாத ஒதுக்கீடான 12 - 35 கிலோ அரிசியை இம்மாதத்திலேயே பெற்றுக் கொள்ளலாம்.

நவம்பர் 2025 மாத அரிசியை அக்டோபர் 2025 மாதத்தில் பெறாதவர்கள், வழக்கம்போல் நவம்பர் மாதத்தில் தங்களுக்குரிய அரிசியினைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த வசதியினை அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களும் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

### கரூர் விவகாரத்தில் சட்டமன்றத்தில் ஆணித்தரமாகப் பேசமுடியாத

# பழனிசாமி வெளிநடப்பு செய்து பயில்வான் வேடம் போட்டுள்ளார்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி தாக்கு!



சென்னை, அக்.17-

போரில் வாள் சுழற்ற முடியாத வீரன், வீட்டில் வில் வித்தை காட்டினானாம்! என்பதுபோல் கரூர் விவகாரத்தில் சட்டமன்றத்தில் ஆணித்தரமாகப் பேச முடியாத எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, வெளியே போய் பயில்வான் வேடம் போட்டிருக்கிறார் என கனிமவளத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :-

முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி 'கேள்வி' என்ற பெயரில் முன்வைத்த வதந்திகளுக்கெல்லாம் ஆதாரத்தோடு பதிலளித்தார். கடந்த அதிமுக ஆட்சியில் நடந்த தூத்துக்குடி துப்பாக்கிச் சூடும் அதைத் தொடர்ந்து எடப்பாடி பழனிசாமி நடந்து கொண்ட விதத்தைத் தோலுரித்துக் காட்டியதைக் கண்டும், பதில் பேசத் திராணியின்றிச் சட்டமன்றத்தை விட்டே ஓடிய பழனிசாமி,சமூக வலைத்தளத்தில் வந்து கம்பு சுற்றிக் கொண்டிருக்கிறார்.

**காற்றோடு கத்திச் சண்டை!**

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் சட்டமன்றத்தில் எதிர்க் கட்சிகளின் காலி இருக்கைகளைப் பார்த்துப் பேசிய வீராதி வீரன் யார்? அன்றைக்குக் காற்றோடு கத்திச் சண்டை போட்டவர், இன்று வெட்டி வசனம் பேசுகிறார்.

கூவத்தூரில் ஊர்ந்தெடுக்கப்பட்டு, டேபிளுக்கு அடியில் ஒளிந்து கிடந்த சூராதி சூரர், சட்டமன்றத்தில் வெளிநடப்பு செய்துவிட்டு வீரவசனம் பேசுகிறார்.

சி.பி.ஐ.க்கு பயந்து, அமலாக்கத் துறைக்கு அஞ்சி, தேர்தல் ஆணையத்திற்கு நடுங்கி பிரதமர் மோடி பின்னாலும் ஒன்றிய அமைச்சர் அமித்ஷா பின்னாலும் ஒளிந்து கொண்டிருக்கும் கோழைக்கு வீரவசனம் எல்லாம் எதற்கு?

கருப்பு பட்டை அணிந்து வந்தது பற்றி சொல்லியிருக்கிறார் பழனிசாமி. வக்பு திருத்தச் சட்டத்திற்கு எதிராகச் சட்டமன்றத்தில் திமுக தீர்மானம் இயற்றியது. எங்கே தனது டெல்லி எசமானர்கள் கோபித்துக் கொள்வார்களோ என்ற பயத்தில் சட்டசபையில் எதிர்ப்பு தெரிவிப்பதற்காக வழங்கப்பட்ட கருப்பு பேட்ஜைக் கூட வாங்காமல் ஓடிய பயந்தாங்கொள்ளிகள், கருப்புப் பட்டை பற்றிப் பேசுவதற்கு அருகதை இருக்கிறதா? பாஜகவின் கோபத்திற்கு ஆளாகிவிடுவோமோ, அமலாக்கத்துறை வந்துவிடுமோ எனத் தினம் தினம் அஞ்சி, ரத்தக் கொதிப்பிலேயே வாழ்பவர்களா ரத்தத்தின் ரத்தங்களைக் காப்பாற்றப் போகிறார்கள்?

**மகாமகச் சாவுகள்!**

அ.தி.மு.க. ஆட்சியில் ஜெயலலிதா பங்கேற்ற மகாமகத்தில் நெரிசலில் சிக்கி 48 பேர் துள்ளத் துடிக்க இறந்து போனார்கள். "மகாமகத்திற்கு வந்து இறந்து போனதால் அவர்கள் உடனே மோட்சத்திற்குப் போவார்கள்" எனச் சொன்னவர்கள் எல்லாம், கரூர் நெரிசல் மரணத்திற்குப் பாடம் எடுப்பது வேடிக்கை.

இறந்தோரை வைத்து அற்ப அரசியல் செய்கிறார் பழனிசாமி. 41 பேரின் இறப்பில் கூட்டணி அரசியல் செய்யும் கேடுகெட்ட அரசியல்வாதியைத் தமிழ்நாடு இதுவரை கண்டதில்லை.

ஒன்றிய பாஜகவின் அடிமையான பழனிசாமி தனக்கொரு அடிமை சிக்க மாட்டாரா? எனத் தவம் கிடப்பது அவரது தவிப்பிலேயே தெரிகிறது. ஆனால், அதற்காக இறந்தோரை வைத்து அரசியல் செய்தால் அதைத் தமிழ்நாட்டு மக்கள் ஒருநாளும் ஏற்க மாட்டார்கள்.

வெறும் வாட்ஸ்அப் வதந்திகளை மட்டும் நம்பி உயிர் வாழும் எடப்பாடி பழனிசாமிக்கு உண்மை என்ற வார்த்தையைக் கூட உச்சரிக்கத் தகுதியில்லை. தமிழ்நாட்டு மக்களிடம் உங்களின் மயான அரசியல் எடுபடாது.

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி குறிப்பிட்டுள்ளார்.

### 2025 – 2026 ஆண்டிற்கான

# துணை மதிப்பீடுகள் ரூ. 2,914.99 கோடி!

## பேரவையில் துணை நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து – அமைச்சர் தங்கம் தென்னரசு பேச்சு!



சென்னை, அக். 17-

2025-2026 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவுக்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை பேரவைக்கு அளித்து நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பேசியதாவது:

தங்கம் தென்னரசு, நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்: பேரவைத் தலைவர் அவர்களே, 2025-2026 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்க விழைகிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான ஓர் அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை மதிப்பீடுகள், மொத்தம் 2,914.99 கோடி ரூபாய் நிதியை ஒதுக்குவதற்கு வழிவகை செய்கின்றன.

2025-2026 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்பட்ட பிறகு 'புதுப் பணிகள்' மற்றும் 'புது துணைப் பணிகள்' குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட இனங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள தொகையினை அந்நிதிக்கு ஈடு செய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் நோக்கமாகும்.

அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிந்து இயற்கை எய்திய, ஓய்வு பெற்ற மற்றும் தன்விருப்ப ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு உரிய ஓய்வூதியப் பணப்பலன்களை வழங்கிட, வழிவகை முன்பணமாக 1,137.97 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

2024 ஃபெஞ்சல் புயல் பாதிப்புகளுக்காக தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 2025-26-ல் பெறப்பட்ட உதவித் தொகை 522.34 கோடி ரூபாயை மாநிலப் பேரிடர் நிவாரண நிதிக்கு மாற்றம் செய்ய அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக 3,000 புதிய பி.எஸ். 6 வகை பேருந்துகளை 2025-26 ஆம் ஆண்டில் வாங்குவதற்காக பங்கு மூலதன உதவியாக 471.53 கோடி ரூபாயை கூடுதலாக அரசு அனுமதித்துள்ளது. இதற்காக துணை மதிப்பீடுகளில் ரூ.1,000 "மானியக் கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை" என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. மீதத் தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறுநிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

2025-26 ஆம் ஆண்டில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக கூடுதல் தொகை 469.84 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இதற்காக துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை" என்பதன்கீழ் ஒவ்வொரு இனத்தின் கீழும் ரூ.1,000 சேர்க்கப்பட்டுள்ளது. மீதத் தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறுநிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

பேரவைத் தலைவர் அவர்களே, 2025-26 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மான்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு உரையாற்றினார்.

### எஸ்.இராசரெத்தினம் வரவேற்புரை: வி.ஐ.டி. ஜி.விஸ்வநாதன் முன்னிலை!

# கவிஞர் எஸ்.கருணானந்தம் நூற்றாண்டு விழா - மலர் வெளியீடு!

## கி.வீரமணி தலைமை! கி.இராஜமாணிக்கம் – ம.இராசேந்திரன் பங்கேற்பு!

சென்னை, அக். 17-

கவிஞர் எஸ்.கருணானந்தம் நூற்றாண்டு விழா நாளை (18.10.2025) மாலை 5 மணிக்கு கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலக அரங்கத்தில் நடைபெறுகிறது.

இதில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமை தாங்குகிறார். வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் ஜி. விஸ்வநாதன் முன்னிலை வகிக்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் கி. இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு), தமிழ்நாடு அரசு. மேனாள் திட்டக்குழுத் தலைவர், பேராசிரியர் மு. நாகநாதன், மேனாள் துணை வேந்தர், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம். டாக்டர் ம.இராசேந்திரன், மேனாள் துணைவேந்தர், அழகப்பா பல்கலைக்கழகம் பேராசிரியர் அ.இராமசாமி, மேனாள் துணைவேந்தர், எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம். டாக்டர் (மேஜர்) இராஜா, மேனாள் தமிழ்ப் பேராசிரியர், சென்னை மாநிலக் கல்லூரி. பேராசிரியர் மறைமலை இலக்குவனார், மேனாள் தமிழ்ப் பேராசிரியர், சர் தியாகராயா கல்லூரி, சென்னை முனைவர் இரா.மணியன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுகின்றனர்.

மாலை 05.30 மணி தமிழ்த்தாய் வாழ்த்து, கவிஞரின் கவிதை வாசிப்பு மூன்றாம் தலைமுறையினர், எஸ். இராசரெத்தினம், ஐ.ஏ.எஸ். (ஓய்வு) வரவேற்புரையாற்றுகிறார்.

கவிஞர் படைப்புகளின் தொகுப்பை வெளியிடுபவர் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, முதற்படி பெறுபவர் கி.இராஜமாணிக்கம்,

மலரினை ஜி.விஸ்வநாதன் வெளியிடுகிறார். பெறுபவர் டாக்டர். ம.இராசேந்திரன், அண்ணா காவியம் ஆங்கில மொழி பெயர்ப்பு

டாக்டர் ம.இராசேந்திரன், அண்ணா காவியம் ஆங்கில மொழிபெயர்ப்பு

மொழிபெயர்ப்பாளர் முனைவர் மறைமலை இலக்குவனார்

வெளியிடுபவர் பேராசிரியர் மு.நாகநாதன்,

பெறுபவர் ம.மதிவாணன், ஐ.ஆர்.எஸ். (முதன்மை வருமானவரி ஆணையர்) கவிஞர் கருணானந்தம் நினைவு கல்வி உதவித்தொகை வழங்குதல், கவிஞரின் சகோதரர் எஸ்.கந்தசாமி. சிறப்பு விருந்தினர்கள் உரையாற்றுகின்றனர்.

நிகழ்ச்சி தொகுப்பு சிவ. நாகநாதன் வழங்குகிறார். என். இராசகோபால் நன்றி கூறுகிறார்.



தருமபுரி மாவட்டம், தமிழக நிருபர்கள் சங்கம் சார்பில் ஒகேனக்கல்லில் பத்திரிகையாளர்களுக்கு நலவாரியம் அமைத்து தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றி 40 ஆண்டுகளுக்கு மேல் பத்திரிகை துறையில் பணியாற்றி வரும் மூத்த பத்திரிகையாளர்கள் முரசொலி மணி, கலைஞர் வேணுகோபால், ஸ்ரீனிவாசன், திருமலைவாசன் ஆகியோருக்கு நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. நிகழ்வில் டி.எஸ்.பி.பாலகிருஷ்ணன், தமிழக நிருபர்கள் சங்கத்தின் இராசசேகரன், சிவக்குமார், நரசிம்மகுமார், செந்தில்குமார், சேட்டுமாதையன், நவீன் ஜார்ஜ், இர்ஃபான்,தர்மராஜன், ஜீவானந்தம், தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், முருகேசன், மற்றும் 100 க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில், உதகை, குன்னூர் மற்றும் கூடலூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட பாக நிலை முகவர்கள் (BLA2) கூட்டம் உதகை ஒக்கலிகர் திருமண மண்டபத்தில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு தலைமையில் நடைபெற்றது.